**PROCEEDINGS OF THE PUBLIC HEARING CONDUCTED FOR THE PROPOSED MINING PROJECT OF TMT.P.SUDHA ROUGH STONE QUARRY LEASE OVER AN EXTENT OF 2.50.0 HA LOCATED AT SF.NO. 265 (PART – 2), MATHAKONDAPALLI VILLAGE, DENKANIKOTTAI TALUK, KRISHNAGIRI DISTRICT ON 23.07.2024 AT 11.00 AM AT M/S. BETTADHAMMA SAMUDHAYA BHAVANA, NEAR BETTADHAMMAKOVIL, KAPPAKAL VILLAGE, KALUKONDAPALLI VILLAGE PANCHAYAT, DENKANIKOTTAI TALUK, KRISHNAGIRI DISTRICT**

**Present:**

| | | | |
|---|---|---|---|
| 1 | Thiru.G.Kumaran | : | Sub Collector(i/c), Hosur<br>(Representative of the District Collector, Krishnagiri) |
| 2 | Er. M.Selvakumar | : | District Environmental Engineer,<br>Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District |
| 3 | Er. K. Ganesan | : | Assistant Engineer,<br>Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District |
| 4 | Tmt.P.Sudha | : | The Proponent,<br>**Tmt.P.Sudha Rough Stone Quarry** |
| 5 | Thiru.P.Gopinath | : | EIA Consultant,<br>M/s. Ecotech Labs Pvt Ltd, Chennai |
| | Public | : | 73 Nos. (Attendence enclosed as Annexure) |

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District welcomed the Sub Collector(i/c), Hosur (Representative of the District Collector, Krishnagiri), Revenue officials, all the general public and project proponent who have attended the public hearing for the proposed Tmt.P.Sudha Rough Stone Quarry, Lease over an Extent of 2.50.0 Ha Located at

SF.No. 265 (Part – 2), lease over an extent of 2.50.0 Ha (Govt. poramboke land), Mathakondapalli Village, Denkanikottai Taluk, Krishnagiri District is required to get Environmental Clearance (EC) from the State Environment Impact Assessment Authority of Tamilnadu. He added that the public notice informing the conducting of Public Hearing was published in the Tamil and English dailies, such as, "Dinamalar" and "The New Indian Express" dated 21.06.2024 and bit notices regarding public hearing was issued to the public of Mathagondapalli Village, Chinnamathagondapalli Village and Madhukur Village with audio announcement through auto vehicle in and around the villages. Further, he informed that the project proponent would make a presentation on the project, after which the public can express their views.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District also stated that the views, suggestions and queries of the public and reply by the project proponents will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu.

The Sub Collector(i/c), Hosur (Representative of the District Collector, Krishnagiri) has initiated the Public Hearing process. Further, the Sub Collector(i/c), Hosur has requested the project proponent to explain about their proposed rough stone quarry project through power point presentation and requested the public to obtain necessary clarifications for their doubts.

Thereafter, Thiru.P.Gopinath, EIA Consultant, M/s. Ecotech Labs Pvt Ltd of the proposed rough stone quarry project has made presentation about the proposed rough stone quarry project to the public along with Environmental Management Plan. Thereafter, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Hosur, Krishnagiri District has invited the public to express their views and comments about the proposed rough stone quarry project. The views and suggestions of the public are detailed below:

**1. Thiru. H.N.Ramesh, Kalukondapalli Village:**

Thiru. H.N.Ramesh has informed that, the quarry management is running quarries in this area from past four years and till date no problem has arisen due to the operation of the quarry. He requested that, the blasting should be carried out safely as per the government norms in the proposed quarry so that there is no harm to the local public. Further, he added that, the local people should be given employment in the proposed quarry and the quarry management could provide the M Sand at a low price to the local people.

**2. Thiru. Suresh, Mathagondapalli Village:**

Thiru. Suresh has said that, the quarry management is running quarries in this area without any hindrances to the public from past four years. He requested that blasting in the proposed quarry should be carried out noiselessly as per the government norms so that there is no harm to the general public. Further, He requested to sprinkle the water on both sides of quarry road that connecting the main road to prevent the emanation of dust thereby control the air pollution in that area.

**3. Thiru. Srinivas Gowda, Mathagondapalli Village:**

Thiru. Srinivas Gowda has said that, the direct/ indirect employment opportunities will be created for the local people through the proposed quarry project, so he welcomes the quarry project.

**4. Thiru. Suresh, Kappakal Village:**

Thiru. Srinivas Gowda has requested that, blasting in the proposed quarry should be carried out noiselessly as per the government norms so that there is no harm to the general public and to sprinkle the water on both sides of quarry road that connecting the main road to prevent the emanation of dust thereby control the air pollution in that area. Further, he asked that the road should be maintained at specified intervals.

**5. Thiru. Guruvareddy, Mathukur Village:**

Thiru. Guruvareddy has requested that, blasting in the proposed quarry should be carried out noiselessly as per the government norms so that there is no harm to the general public and he informed that, the road connecting the quarry and main road is haul road and the road often damaged due to movement of heavy trucks. Hence requested to pave the proper road either by the government or quarry management.

**6. Thiru. Rameshreddy, Mathukur Village:**

Thiru. Rameshreddy has requested that, blasting in the proposed quarry should be carried out noiselessly as per the government norms so that there is no harm to the general public and the quarry management could provide the M Sand at a low price to the local people.

**Conclusion:**

Finally, the District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Krishnagiri informed that the views, suggestions, written complaints and queries of the public and reply by the project proponent are recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority of Tamilnadu - Chennai.

Further, 6 number of petitions were received on the proposed Tmt.P.Sudha Rough Stone Quarry project during the public hearing meeting. The petitions are enclosed herewith.

Further, it is informed that there is no written representation was received in the O/o. District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Hosur, Krishnagiri District from the public on the proposed Rough Stone Quarry project.

List of public attended the public hearing meeting along with photographs, Pen Drive and CD recorded with the entire proceedings of public hearing are enclosed herewith.

**District Environmental Engineer**
**Tamilnadu Pollution Control Board**
**Hosur**

**Sub Collector(i/c)**
**Hosur**

**District Collector**
**Krishnagiri**

**திருமதி. பி. சுதா ரப் ஸ்டோன் குவாரி, சர்வே. எண்.265 (பகுதி 2), மதகொண்டப்பள்ளி கிராமம், தேன்கனிக்கோட்டை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட ரப் ஸ்டோன் குவாரி 2.50.0 ஹெக்டர் பரப்பளவில் நடத்த சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 23.07.2024 அன்று பெட்டதம்மா கோவில் அருகில், கப்பகல் கிராமம், கலுகொண்டப்பள்ளி ஊராட்சி, தேன்கனிக்கோட்டை வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அமைந்துள்ள தி/ள். பெட்டதம்ம சமுதாய பாவனா, முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்ட நடவடிக்கை விபரங்கள்:**

பங்கேற்றோர்:

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு.கோ.குமரன் | : | சார் ஆட்சியர் (பொ), ஓசூர்<br>(மாவட்ட ஆட்சித் தலைவர், கிருஷ்ணகிரி அவர்களின் பிரதிநிதி) |
| 2 | Er. M. செல்வகுமார் | : | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 3 | Er.K.கணேசன் | : | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>ஓசூர். |
| 4 | திருமதி.P. சுதா | : | உரிமையாளர்<br>திருமதி P. சுதா ரப் ஸ்டோன் குவாரி |
| 5 | திரு. P. கோபிநாத் | : | சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர்<br>தி/ள்.ஈக்கோ டெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை. |
| | பொதுமக்கள் | : | 73 எண்ணிக்கை (வருகை<br>பதிவேடு இணைக்கப்பட்டுள்ளது) |

திருமதி P. சுதா ரப் ஸ்டோன் குவாரிக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெறுவது தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்த சார் ஆட்சியர் (பொ), ஓசூர், பொதுமக்கள் மற்றும் திருமதி P. சுதா ரப் ஸ்டோன் குவாரியின் உரிமையாளர் அனைவரையும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் வரவேற்றார். மேலும், இந்த பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடைபெறும் விவரம் ஏற்கனவே தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களான முறையே "தினமலர்" மற்றும் "தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் 21.06.2024 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டு இருந்ததை சுட்டிக்காட்டினார். மேலும், மதகொண்டப்பள்ளி கிராமம், சின்னமதகொண்டப்பள்ளி கிராமம், மதுக்கூர் கிராமம் ஆகிய கிராமங்களின் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஒலிப்பெருக்கி மற்றும் துண்டு பிரசுரங்கள் மூலம் பொது அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இத்திட்டம் தொடர்பாக குவாரியின் திட்ட ஆலோசகர் விளக்கவுரையாற்றிய பின் பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பாக தங்களது கருத்துக்களையும் மற்றும் ஆலோசனைகளை வழங்கலாம் என கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரியின் உரிமையாளர்கள் சார்பாக அவர்களுடைய திட்ட ஆலோசகர் ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தை பற்றிய விளக்கவுரையை பொதுமக்களுக்கு விளக்குவார் என்றும் அதனை தொடர்ந்து பொதுமக்கள் இத்திட்டம் தொடர்பான கருத்துக்கள், ஆலோசனைகள், சந்தேகங்கள், விளக்கங்களை கேட்கலாம் எனவும் இவையனைத்தும் வீடியோகிராபி மற்றும் ஒலிப்பதிவு செய்யப்பட்டு, இக்கூட்டத்தின் நடவடிக்கைகள் மற்றும் குறிப்புகள் தமிழ்நாடு மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பப்படும் என தெரிவித்தார்.

சார் ஆட்சியர் (பொ), ஓசூர், அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தை தொடங்கி வைத்தார். பின்னர் திருமதி P. சுதா ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தின் உரிமையாளர்களை உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி தொடர்பான விளக்கவுரையை நிகழ்த்தக் கூறினார்.

திருமதி P. சுதா ரப் ஸ்டோன் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு ஆலோசகர் திரு.P.கோபிநாத், தி/ள்.ஈக்கோ டெக் லேப்ஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை அவர்கள் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்திற்கு வருகை புரிந்தோர் அனைவரையும் வரவேற்று ரப் ஸ்டோன் குவாரி திட்டத்தின் செயல்பாடு தொடர்பாகவும் மற்றும் இதன் செயல்பாட்டின் போது மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் மேலாண்மை திட்டம் தொடர்பாகவும் காணொளி விளக்கக்காட்சி மூலம் விரிவாக எடுத்துரைத்தார்.

மேற்கூறிய விளக்கவுரைக்கு பிறகு, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துக்களை பதிவு செய்யும் முன்பு பொதுமக்கள் தங்கள் பெயர் மற்றும் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு தெரிவித்தார்.

அதன்படி, பொதுமக்கள் தங்களுடைய கீழ்க்கண்ட கருத்துக்களை மற்றும் ஆலோசனைகளை தெரிவித்தனர்.

**பொதுமக்கள் கருத்துகேட்பு:**

**1. திரு. H.N. ரமேஷ், கலுகொண்டப்பள்ளி கிராமம்:**

திரு. H.N. ரமேஷ் அவர்கள், இக்குவாரி நிர்வாகத்தினரால் நான்கு வருடங்களாக குவாரிகள் இப்பகுதியில் நடத்தப்பட்டு வருகின்றன. அக்குவாரியின் இயக்கத்தினால் எவ்வித பிரச்சனையும் இதுநாள் வரை ஏற்படவில்லை என்று கூறினார். மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள குவாரியில் வெடி வைக்கும் பொழுது

பொது மக்களுக்கு பாதிப்பு இல்லா வண்ணம் அரசு விதிகளுக்கு உட்பட்டு பாதுகாப்பாக வெடிவைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மேலும், இக்குவாரியில் உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திட வேண்டும் எனவும், உள்ளூர் மக்களுக்கு குறைந்த விலையில் எம் சாண்டு வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

**2. திரு. சுரேஷ், மதகொண்டப்பள்ளி கிராமம்:**

திரு. சுரேஷ் அவர்கள், இக்குவாரி நிர்வாகத்தினரால் நான்கு வருடங்களாக குவாரிகள் இப்பகுதியில் நடத்தப்பட்டு வருகின்றன. அக்குவாரியின் இயக்கத்தினால் எவ்வித பிரச்சனையும் இதுநாள் வரை ஏற்படவில்லை. மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள குவாரியில் வெடி வைக்கும் பொழுது பொது மக்களுக்கு பாதிப்பு இல்லா வண்ணம் அரசு விதிகளுக்கு உட்பட்டு இரைச்சலின்றி வெடிவைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். குவாரியிலிருந்து பிரதான சாலையை இணைக்கும் குவாரி சாலையில் இருபுறமும் தண்ணீர் தெளித்து, தூசு எழும்பா வண்ணம் காற்று மாசு ஏற்படுவதை தடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

**3. திரு . ஸ்ரீனிவாஸ் கௌடா, மதகொண்டப்பள்ளி கிராமம்:**

திரு. ஸ்ரீனிவாஸ் கௌடா அவர்கள், உத்தேசிக்கப்பட்டுள்ள இக்குவாரி திட்டத்தின் மூலம் நேரடியாக அல்லது மறைமுகமாக உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்பு உருவாகும் என்றும் அதனால் இக்குவாரி திட்டத்தினை தாம் வரவேற்பதாக கூறினார்.

**4. திரு . சுரேஷ், கப்பக்கல் கிராமம்:**

திரு. சுரேஷ் அவர்கள், உத்தேசிக்கப்பட்டுள்ள குவாரியில் வெடி வைக்கும் பொழுது பொது மக்களுக்கு பாதிப்பு இல்லா வண்ணம் அரசு விதிகளுக்கு உட்பட்டு இரைச்சலின்றி வெடிவைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

குவாரியிலிருந்து பிரதான சாலையை இணைக்கும் குவாரி சாலையில் இருபுறமும் தண்ணீர் தெளித்து, தூசு எழும்பா வண்ணம் காற்று மாசு ஏற்படுவதை தடுக்க வேண்டும் என்றும் அச்சாலையை குறிப்பிட்ட கால இடைவெளியில் பராமரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

5. **திரு . குருவாரெட்டி, மதுக்கூர் கிராமம்:**

திரு. குருவாரெட்டி அவர்கள், உத்தேசிக்கப்பட்டுள்ள குவாரியில் வெடி வைக்கும் பொழுது பொது மக்களுக்கு பாதிப்பு இல்லா வண்ணம் அரசு விதிகளுக்கு உட்பட்டு சத்தமின்றி வெடிவைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். குவாரியிலிருந்து கிராமத்தை இணைக்கும் சாலையானது மண்சாலையாக உள்ளது. எனவே, இச்சாலையானது அடிக்கடி பழுதடைகிறது. எனவே, அரசு அல்லது குவாரி நிர்வாகத்தினர் மண்சாலையை தார் சாலையாக அமைத்து தருமாறு கேட்டுக் கொண்டார்.

6. **திரு . ரமேஷ்ரெட்டி, மதுக்கூர் கிராமம்:**

திரு. ரமேஷ்ரெட்டி அவர்கள், உத்தேசிக்கப்பட்டுள்ள குவாரியில் வெடி வைக்கும் பொழுது பொது மக்களுக்கு பாதிப்பு இல்லா வண்ணம் அரசு விதிகளுக்கு உட்பட்டு இரைச்சலின்றி வெடிவைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். மேலும், உள்ளூர் மக்களுக்கு குறைந்த விலையில் எம் சாண்டு உள்ளிட்ட கட்டுமான பொருட்களை வழங்குமாறு கேட்டுக் கொண்டார்.

**முடிவுரை:**

இறுதியாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர் அவர்கள் பொதுமக்கள் கூறிய கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு மற்றும் எழுத்து பூர்வமான மனுக்கள் பெறப்பட்டு அவை மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் சென்னைக்கு அனுப்பப்படும் என்பதனை தெரிவித்துக்

கொண்டு இந்த பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் முடிவுபெற்றதாக தெரிவித்தார்.

மேலும், உத்தேசிக்கப்பட்டுள்ள திருமதி P. சுதா ரப் ஸ்டோன் குவாரி திட்டம் தொடர்பாக பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின்போது பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட 6 எண்ணிக்கையிலான மனுக்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும், திருமதி P. சுதா ரப் ஸ்டோன் குவாரி உத்தேசிக்கப்பட்டுள்ள ரப் ஸ்டோன் குவாரி திட்டம் அமைப்பது தொடர்பாக பொதுமக்களிடம் எழுத்து மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ, மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், ஓசூர், அலுவலகத்தில் எவ்வித மனுக்களும் பெறப்படவில்லை.

மேற்கூறிய பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பங்குபெற்றோர் பட்டியல் கூட்ட நடவடிக்கைகளை பதிவு செய்த காணொலி குறுந்தகடு, ஒலி பதிவு மற்றும் புகைப்படங்கள் அடங்கிய பதிவுகோல், ஆகியவை இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 24/7/2024 | 24/07/24. | |
| மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் | சார் ஆட்சியர் (பொ) | மாவட்ட ஆட்சியர் |
| தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் | ஓசூர் | கிருஷ்ணகிரி |
| 24/07/24 ஓசூர் | 5/7 | 5/7 |